# பண்பாட்டு நிலவுருவின் மீளெழுகையும் இருப்பும்: முல்லைத்தீவு முள்ளியவளை கோவலன் கூத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**யாழினி, ந., நவதர்சினி, க.**
நாடகமும் அரங்கக்கலைகளும் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
haarunkeerththan@gmail.com

*இந்த ஆய்வானது "பண்பாட்டு நிலவுருவின் மீளெழுகையும் இருப்பும்: முல்லைத்தீவு முள்ளியவளை கோவலன்கூத்து" என்னும் தலைப்பை அடிப்படையாகக்கொண்டு அமைகின்றது. ஒரு நிலம் பாரம்பரியக்கலையான இக் கோவலன் கூத்தின் நிலைத்திருப்பால் அதன் அடையாளத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் பேணுகின்றது என்பதும், ஈழத் தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தை நிலவுருவின் அடிப்படையில் பண்பாட்டு நிலவுருவாக வரையறுத்துக்கொள்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவு முள்ளியவளை கிராமத்தை பொறுத்தவரையில் கூத்தானது அவர்களது வாழ்வியலுடன் தொடர்புபட்டே காணப்படுகிறது. பாரம்பரியமாக பரம்பரை பரம்பரையாக கைக்கொள்ளப்படும் இவர்களது வழக்காறுகள், சடங்குகள் அதனோடு சேர்ந்த நம்பிக்கைகளின் அடியாகவே கோவலன்கூத்து ஆற்றுகை செய்யப்படுகின்றது. கோவலன் கூத்திற்கும் காட்டாவிநாயகர் ஆலயத்திற்கும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கும் அறாத்தொடர்பு காணப்படுகின்றது. ஒரு சமூகமாக இக் கூத்தை இம் மக்கள் எவ்வாறு கைக்கொள்கிறார்கள் என்பதும் அதனால் கூத்தின் நிலைபேறு எவ்வாறு ஏற்படுகின்றது என்பதும் கூத்தின் தொடர்ச்சியான பயிலுகை ஒரு நிலவுருவை எவ்வாறு பண்பாட்டு நிலவுருவாக அடையாளப்படுத்துகின்றது என்பதையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது. ஈழப்போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளாலும் போர் அச்சுறுத்தல்களினாலும் பாதிக்கப்பட்டிருந்தபோதும் மக்களின் மீளெழுகையோடு அம் மக்களின் பண்பாடும் மீளெழுந்தது எனலாம். திட்டமிடப்பட்ட முறையில் ஒரு இனத்தை அழிக்கும் கருவியாகவே போர் காணப்பட்டது. இருப்பினும் இம்மக்கள் போரினால் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து மீண்டெழுந்து தமது அடையாளத்தையும் தம் மண்ணின் அடையாளத்தையும் பேணுகின்றனர். இக்கூத்து நிலைத்து நிற்பதற்கு அம்மக்கள் தமது பாரம்பரியத்தை கைக்கொண்டு பண்பாட்டு தொடர்ச்சியை பேணுவதே காரணம் எனலாம். பல்வேறு கூத்துக்குழுக்கள் உருவாகினாலும் அத்தனை குழுக்களும் கூத்து ஆடவேண்டும் என்றே நிற்கிறார்களே தவிர அதை விட்டுவிடும் எண்ணம் கொள்ளவில்லை. இதற்கு காரணம் கூத்தின் மேலுள்ள ஈடுபாடு என்றே கூறமுடியும். முல்லைமோடி கூத்து தொடர்பான நேர்காணல் மூலம் பெறப்பட்ட முதலாம்நிலை தரவுகளையும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையம் மூலம் பெற்றுக்கொண்ட இரண்டாம்நிலை தரவுகளையும் அடிப்படையாகக்கொண்டு பண்புசார் முறைகளை பயன்படுத்தி பாரம்பரிய அடையாளங்களை முனைப்புறுத்த கூத்து எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது? சடங்கிற்கும் கூத்திற்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது? சமூக கூட்டுணர்வு எவ்வாறு ஆற்றுகையூடாக வெளிப்படுத்தப்படுகின்றது? போர் மற்றும் இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட சாதக பாதக காரணிகள் எவை? கூத்து தொடர்ச்சியாக*

ஆற்றுகை செய்வதற்கான காரணங்கள் என்ன? புவியியல் நிலவுரு ஒன்று பண்பாட்டு நிலவுருவாக மாறப் பாரம்பரிய ஆற்றுகையின் பங்களிப்பு என்ன? போன்ற ஆய்வு வினாக்களைக் கொண்டு இது முன்னெடுக்கப்பட்டது. பாரம்பரிய ஆற்றுகையான கூத்து இடப்பெயர்வுகள் மற்றும் போரும் போருக்கு பிந்திய காலங்களிலும் குறித்த சமூகத்தின் கூட்டுணர்வு, பண்பாடு, அடையாளம் என அவர்களது பாரம்பரியத்தை எப்படி பாதுகாக்கிறது அல்லது அதன் இருப்பை தக்கவைத்துக்கொள்கின்றது என்பதே இவ் ஆய்வுப்பிரச்சினையாகக் காணப்படுகிறது. இவ்வாய்வின் நோக்கமானது கூத்தின் இருப்பானது புவியியல் நிலவுரு ஒன்றை எப்படி பண்பாட்டு நிலவுருவாக அடையாளப் படுத்துகின்றது என்பதை கண்டறிவது ஆகும். இதனைக் கண்டறிவதன் ஊடாக பண்பாடும் பாரம்பரியமும் அழிந்து போகாமல் இருக்க கூத்துக்கள் கைக்கொள்ளப்படவேண்டும் என்றும் அழியாது பயில்நிலையில் இருக்கவேண்டும் என்பதுமே ஆகும். இவ் ஆய்வுக் கட்டுரை நூலாக வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில் ஆய்வாளர்களும் மாணவர்களும் இத் துறைசார்ந்தவர்களும் பயன்பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**திறவுச்சொற்கள் :** சடங்கு, பண்பாடு, கூட்டுணர்வு, பண்பாட்டு நிலவுரு, அடையாளம்